**Spl.CC.No.80/2019**

**16-09-2021** ஆம் தேதி அன்று சாட்சி **P.W. 54 (**சண்முகபிரியா**)** அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**.** எதிரியின் தரப்பில் குறுக்கு விசாரணை**.** தொடங்கிய நேரம் **2.30pm**

நான் **2010** ம் வருடத்திலிருந்து ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர் அலுவலகத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வந்தேன்**.** அதற்கு முன்பாக **2006** வருடத்திலிருந்து **2008** ம் வருடம் ஜுன் மாதம் வரை கோயமுத்தூர் நகரில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வந்தேன்**.** இவ்வழக்கின் எதிரி திராவிட முன்னேற்ற கழக என்ற அரசியல் கட்சியின் கோவை மாவட்டத்தில் ஒரு முக்கியமான நபர் என்றால் சரிதான்**.** இவ்வழக்கில் எதிரி தி**.**மு**.**க கட்சியின் தலைமை பொறுப்பிலும்**,** கோவை மாவட்டத்தின் கட்சியின் பொறுப்புகளிலும் இருந்து வருகிறார் என்றால் சரிதான்**.** எதிரி சட்ட மன்ற உறுப்பினராகவும்**,** தமிழக அரசின் அமைச்சராகவும் பதிவி வகித்து வந்திருக்கிறார் என்றால் சரிதான்**.** **2006-2010** காலத்தில் திராவிட முன்னேற்ற கழகம் ஆளுங்கட்சியாக இருந்தபோது எதிரி அந்த அமைச்சரவையில் அமைச்சராக பதிவி வகித்தார் என்றால் சரிதான்**.** **2011** ஆம் வருடத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சி பொறுப்பிற்கு வந்ததது என்றால் சரிதான்**.** **2011** ஆம் வருடத்தில் தமிழக முதல்வராக செல்வி**.** ஜெயலலிதா அவர்கள் முதல்வர் ஆனார் என்றால் சரிதான்**.** **2011** ஆம் வருடம் அ**.**இ**.**அ**.**தி**.**மு**.**க ஆட்சி பொறுப்பிற்கு வந்த பிறகு தி**.**மு**.**க ஆட்சி செய்த போது பொறுப்பில் இருந்த அனைத்து அமைச்சர்கள் மீதும் ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது**.** கோவை மாவட்டத்தில் எதிரி திரு**.** பொங்களூர் பழனிசாமி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது**.** **ExP108** முதல் தகவல் அறிக்கையில் சம்பவ காலம் **13.06.2006** முதல் **31.03.2010** வரை என

குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். தகவல் வரப்பெற்ற நேரம் என்ற காலத்தில் **18.07.2011** நேரம் **10.00** மணி என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். பொது நாட்குறிப்பில் **28.11.2011, 15.30** க்கு இவ்வழக்கு பற்றி குறிப்பு உள்ளது என்றால் சரிதான். பொதுநாட்குறிப்பில் உள்ள குறிப்பு காலம் **3(c)** யில் குறிப்பிடபட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கையின் **4** வது காலத்தில் **-in writing (computer)** என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் என்பது மேற்கண்டவற்றின் பொருளாகும். கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரை யார் அளித்தார்கள் என்றால், திரு.**S.**கிரினிவாசபிரசாத், **Advocate, Founder, Free legal aid centre for Human rights violations, Nagarkoil, Kanniyakumari District.** என்பவரால் கொடுக்கப்பட்டிருந்தது. திரு.**S.**கிரினிவாசபிரசாத் புகாரை யாருக்கு எழுதியிருந்தார் என்றால், அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. அந்த புகாரின் பெயரில் நான் **preliminary enquiry** நடத்தி, முகாந்திரம் இருந்ததால் நான் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்தேன். திரு.**S.**கிரினிவாசபிரசாத் கொடுத்த புகாரை நான் பார்த்தேன், ஆனால் அது யாருக்கு எழுதப்பட்டிருந்தது என தற்போது எனக்கு ஞாபகமில்லை. அந்த புகார் எனது தலைமை அலுவலகத்திலிருந்து வரப்பெற்றது. தலைமை அலுவலகம் என நான் சொல்வது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு இயக்குநரகம் சென்னை ஆகும். எங்களது தலைமை அலுவலகத்தின் தலைவர் இயக்குநர் ஆவார். ஊழல் தடுப்பு கண்காணிப்பு பிரிவு இயக்குநரகம் சென்னைக்கு எப்படி புகார் வந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.**6** ல் புகார்தாரர்/தகவல் அளிப்பவர் என்ற கலத்தில் எனது பெயர் எழுதப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். புகார்தாரர் திரு.**S.**கிரினிவாசபிரசாத் அவர்களை நான் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் இல்லை. அந்த புகாரை எனக்கு ஒரு தகவலாக எடுத்துதான் முதல்நிலை விசாரணை செய்தேன். திரு.**S.**கிரினிவாசபிரசாத் கொடுத்த புகாரின் தேதி **18.07.2011-** னா **-** என்றால், எனக்கு தகவல் வரப்பெற்ற தேதி **18.07.2011** ஆகும். அப்புகாரின் தேதி பற்றி எனக்கு தெரியாது. என்ன தகவல் வரப்பெற்றது என்றால், எதிரி திரு. பொங்கலூர் பழனிசாமி வருமானத்திற்கு அதிகமாக சொத்து சேர்த்துள்ளார் என்ற தகவல் வரப்பெற்றது. மேற்கண்ட தகவலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு

இயக்குநரகத்திலிருந்து கிடைக்கப்பட்டதா என்றால் அவ்வாறு இல்லை. எனது **Discreet enquiry** யிலிருந்து தெரியவந்தது. **Discreet enquiry** எதன் அடிப்படையில் மேற்கொண்டேன் என்றால், எனக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்டேன். எனக்கு தகவல் கொடுத்த நபரின் பெயரை சொல்ல முடியுமா என்றால் அதனை சொல்ல முடியாது. **Discreet enquiry** யில் எத்தனை ஆவணங்களை நான் பார்த்தேன், என்ன என்ன ஆவணங்களை நான் பார்த்தேன் என்றால், எதிரி திரு.பொங்களூர் பழனிசாமி மற்றும் அவரது குடும்பத்தார் பெயரில் உள்ள சொத்துக்கள் பற்றி விவரங்கள் சேகரித்தேன். **2006** ம் வருடத்தில் எதிரி திரு. பொங்களூர் பழனிசாமி தேர்தலில் போட்டியிட்ட போது வேட்புமனுவோடு தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கையின் நகலை பெற்றேன். **2011** ஆம் வருடத்தில் எதிரி திரு. பொங்களூர் பழனிசாமி தேர்தலில் போட்டியிட்ட போது வேட்புமனுவோடு தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கையின் நகலை பெற்றேன். மேற்கண்ட ஆவணங்கள் மற்றும் சேகரித்த தகவலின் அடிப்படையில் முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல்நிலை விசாரணையின் பொழுது எதிரியிடம் நான் விளக்கம் ஏதும் கேட்டேனா என்றால், இல்லை. முதல்நிலை விசாரணையில் நான் சேகரித்த விவரங்களை, ஆவணங்களை நீதிமன்றத்திற்கு அனுப்பினேனா என்றால், இல்லை. முதல் தகவல் அறிக்கை **ExP108** ல் காலம் **12** ல் **- separate sheet attached** என குறிப்பிடபட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தனிதாளையும் முதல் தகவல் அறிக்கையோடு இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால், சரிதான். **2006,2011** ஆம் வருடத்தில் எதிரி வேட்புமனுவோடு தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கை குறித்து முதல் தகவல் அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள தனிதாளில் சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. தனிதாளில் முதல்நிலை விசாரணையில் தெரியவந்த தகவல்கள் என குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேன் என்றால், **Disclosed following information** என சொல்லியுள்ளேன். **The accused Tr. N. Palanisamy @ Pongalur Palanisamy had been in possession of pecuniary resources and properties ( in the form of shares, deposits in banks, jewels, motor vehicles, agricultural lands, house sites etc) to the tune of Rs. 1,66,52,950/- in his name as**

**on 13.05.2006 I.e at the beginning of the said check period.** என முதல் தகவல் அறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ள காலம் **12** இணைப்பில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்**.** ரூ**. 1,66,52,950/-** என்ற தொகையை எந்த் தரவுகளின் அடிப்படையில் முடிவுக்கு வந்தேன் என்றால், எதிரி வேட்புமனுவோடு தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கை மற்றும் நான் முதல்நிலை விசாரணையில் சேகரித்த தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கண்ட தொகையை **arrive** செய்தேன். முதல்நிலை விசாரணையின் நான் என்ன என்ன ஆவணங்களை சேகரித்தேன் என்றால் எதிரி.திரு.பொங்களூர் பழனிசாமி மற்றும் அவரது குடும்பத்தார் மற்றும் சகோதரர் பெயரில் உள்ள சொத்துக்கள் குறித்து விவரங்கள் சேகரித்தேன். மற்றும் வேட்புமனுவில் எதிரி திரு.பொங்களூர் பழனிசாமி தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கையின் நகலையும் பெற்று அந்த முடிவுக்கு வந்தேன். எதிரி திரு. பொங்களூர் பழனிசாமி மற்றும் அவரது குடும்பத்தினர், அவரது சகோதரர் பெயரில் இருந்த ஆவணங்களை குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால், முதல்நிலை விசாரணையில் அதனை சேகரித்தேன். அதன் விவரங்கள் ஒவ்வொன்றையும் தற்போது என்னால் சொல்லயிலாது. முதல்நிலை விசாரணையில் சேகரித்த சங்கதிகளின் அடிப்படையில் தான் ரூ. **1,66,52,950/-** என்பது கணக்கீட்டு காலத்தின் தொடக்க சொத்து**(At the beginning of the check period)** என்பதை கண்டறிந்தேன்**.** முதல் தகவல் அறிக்கை காலம் **12** ல் இணைக்கப்பட்ட தனிதாளில்**, The accused Tr.N. Palanisamy @ Pongalur Palanisamy was in possession of pecuniary resources and properties ( in the form of agricultural lands, house sites, cash on hand, investment in shares, investment in business and motor vehicles etc.,) to the tune of Rs. 2,40,17,152/- in his name as on 31.03.2010. I.e at the end of the check period.** என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்**.** மேற்கண்ட தொகையை எதன் அடிப்படையில்

கணக்கிட்டேன் என்றால், **2011** ஆம் வருடத்தில் எதிரி வேட்புமனுவோடு தாக்கல் செய்திருந்த சொத்து விவர அறிக்கையில் இருந்தும், என்னுடைய முதல்நிலை விசாரணையில் கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையிலும் மேற்கண்ட தொகையை கணக்கிட்டேன். முதற்கட்ட விசாரணை**(preliminary enquiry)** வேட்புமனுவோடு இணைக்கப்பட்டிருந்த சொத்து விவர அறிக்கை தவிர வேறு என்ன என்ன ஆவணங்களை நான் பார்த்தேன் என்றால், அது பற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. எனது புலன் விசாரணையில் அது பற்றி விவரங்களை கொண்டுவந்துள்ளேன். மேற்கண்ட **Rs. 2,40,17,152/-** என்பது தோராயமான ஒரு தொகையா அல்லது கணக்கீட்டின் அடிப்படையில் கண்டறிந்த தொகையா என்றால் , முதற்கட்ட விசாரணையில் எனக்கு கிடைக்கபெற்ற தகவல்களின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகை ஆகும். முதல் தகவல் அறிக்கை காலம் **12** ல் இணைக்கப்பட்டுள்ள தனிதாளில், **The accused Tr.N. Palanisamy @ Pongalur Palanisamy received lawful source of income in the form of salary from the Government, income from agricultural lands, house rent, and interest from banks to the tune of Rs. 59,70,312/- during the said check period.** என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட தொகைக்கு என்ன என்ன ஆவணங்களை பார்த்தேன் என்றால், அது பற்றி எனக்கு தற்பொழுது ஞாபகமில்லை. மேற்கண்ட தொகை **Rs. 59,70,312/-** தோராயமாக கணக்கிட்டு உள்ளேனா என்றால், அந்த சமயத்தில் எனக்கு கிடைக்கபெற்ற தகவலின் அடிப்படையில் நான் சரியாக கணக்கிட்டிருக்கிறேன்.

<u>கேள்வி:</u> சொத்துக்கள் குறித்து **13.05.2006** தேதி அன்றும், **31.03.2010** தேதி அன்றும் ஆரம்பகட்ட நிலை, முடிவு கட்ட நிலை என பிரித்து காட்டியிருப்பது போல் எதிரியின் வருமானம் குறித்தும், ஆரம்ப கட்ட நிலையை நீங்கள் கணக்கிட்டீர்களா?

<u>பதில் :</u> ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழான வருமானத்திற்கு அதிகமான சொத்து குவிப்பு குறித்து வழக்குகளில் **check period** ன் தொடக்க காலத்தில் எதிரி கொண்டிருந்த அசையும் மற்றும் அசையா சொத்துகளின் மதிப்பை கணக்கிடுவோம். பின்னர் **check period** ன் இறுதியில் எதிரி கொண்டிருக்கிற அசையும் மற்றும் அசையா சொத்துகளின் மதிப்பை கணக்கிடுவோம். இடைப்பட்ட காலத்தில் எதிரி வாங்கிய சொத்துகள், வாங்கிய

சம்பளங்கள், எதிரியின் செலவினங்கள், வருமானங்கள் முதலியவற்றையும் கணக்கில் கொள்வோம்.

<u>கேள்வி:</u> **Check period** ன் தொடக்க காலத்தில் எதிரியின் வருமானம் குறித்த கணக்கீடுகளை தனியாக கணக்கிட்டிருக்கிறேனா **?**

<u>பதில்:</u> **Check period** ன் தொடக்க காலத்தில் எதிரியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அவரது வருமானங்கள் முதலிய அனைத்தையும் சேர்த்துத்தான் ரூ. **1,66,52,950/-** என கணக்கிட்டிருக்கிறேன்.

<u>கேள்வி:</u> **End of the check period** ன் எதிரியின் வருமானம் குறித்த கணக்கீடுகளை தனியாக கணக்கிட்டிருக்கிறேனா **?**

<u>பதில் :</u> கணக்கீட்டு தாளில் **statement -iii-** ல் எதிரிக்கு **During the check period -**ல் எவ்வளவு வருமான வந்தது என்பதை குறிப்பிட்டிருக்கிறேன்.

**End of the check period –** ல் எதிரியின் வருமானம் குறித்து கணக்கிடாததால், மேற்கண்டவாறு தவறான பதிலை சொல்கிறேன் என்றால் சரியல்ல.

முதல் தகவல் அறிக்கை காலம் **12** ல் இணைக்கப்பட்ட தனிதாளில்" **..... incurred expenses, payment of income tax and payment towards registration charges etc.,)to the tune of Rs. 23,14,202/- during the check period"** என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

<u>கேள்வி :</u> **Check period** ன் தொடக்க காலத்தில் எதிரியின் செலவினங்கள் குறித்த கணக்கீடுகளை தனியாக கணக்கிட்டிருக்கிறேனா **?**

<u>பதில் :</u> **Check period** ன் தொடக்க காலத்தில் எதிரியின் அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் அவரது செலவினங்கள் முதலிய அனைத்தையும் சேர்த்துத்தான் ரூ. **1,66,52,950/-** என கணக்கிட்டிருக்கிறேன்.

<u>கேள்வி :</u> **check period** ன் தொடக்க காலத்தில் எதிரியின் செலவினங்களையும் சேர்த்து கணக்கிட்டுத்தான் ரூ**. 1,66,52,950/-** என்று கூறியிருக்கிறேனா**?**

<u>பதில் :</u> **check period** ன் தொடக்கத்தில் எதிரி உடைமையில் கொண்டிருந்து அசையும் மற்றும் அசையா சொத்துக்களின் மதிப்பை கணக்கிட்டுத்தான் ரூ**. 1,66,52,950/-** என்று கூறியிருக்கிறேன்.

எதிரி தரப்பில் கேட்கப்படும் மேற்கண்ட கேள்விக்கு சரியாக பதில் சொல்லாமல் தவறுதலான பதிலை சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் புகார் தாரரும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தவரும் நான் தான் என்றால், சரிதான். நான் முதற்கட்ட விசாரணையை **(preliminary enquiry)** சரிவர செய்யவில்லை, தவறுதலாக செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக பரிந்துரை கடிதம் எழுதினேன் என முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அந்த பரிந்துரை கடிதத்தை யாருக்கு நான் எழுதினேன் என்றால், இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,சென்னை அவர்களுக்கு எழுதினேன். எந்த தேதியில் எழுதினேன் என்றால், தேதி ஞாபகமில்லை. இக்கோப்பில் அந்த தேதியை நான் குறிப்பிடவில்லை. நான் எழுதிய கடிதத்திற்கு **28.11.2011** தேதியில் இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் இருந்து வழக்கு பதிவு செய்ய அறிவுறுத்தி பதில் வந்தது. நான் எனது தலைமை அலுவலகத்திற்கு அனுப்பிய கடிதத்தின் அலுவலக நகலையும், **28.11.2011** ம் தேதி வரப்பெற்ற பதில் கடிதத்தையும் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளேனா என்றால், இல்லை. அது நிர்வாகரீதியான கடித தொடர்புகள் ஆகும். ஆதலால் அவற்றை நீதிமன்றத்திற்கு அனுப்பவில்லை.

<u>கேள்வி :</u> முதற்கட்ட விசாரணையில் **(preliminary enquiry)** ஆவணங்களை தவிர யார் யாரை நான் விசாரித்தேன்**?**

<u>பதில் :</u> முதற்கட்ட விசாரணையில் நான் மேற்கொண்ட விசாரணை குறித்து சொல்லயிலாது. ஏனென்றால் அது **Discreet Enquiry** ஆகும்.

<u>கேள்வி :</u> இவ்வழக்கின் முதற்கட்ட விசாரணையை எப்பொழுது ஆரம்பித்து எப்பொழுது முடித்தேன்**?**

<u>பதில் :</u> **18.07.2011** ல் ஆரம்பித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுவதற்கு முன்பு வரை முதற்கட்ட விசாரணை நடந்ததாக கருதவேண்டும்.

எதிரி **check period** ல் ரூ**. 37,08,092/-** வருமானத்திற்கு அதிகமான சொத்து சேர்த்துள்ளார் என கணக்கிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பிறகு, புலன் விசாரணை மேற்கொள்ள வேண்டி எங்கள் தலைமை அலுவலகத்திற்கு கடிதம் எழுதினேனா என்றால், ஆமாம் எழுதினேன். நான் அந்த கடிதத்தை இந்த வழக்கில்

குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான்**.** **ExP 109** மற்றும் **110** ஆகியவற்றில் நான் இயக்குநர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு அலுவலத்திற்கு அனுப்பிய கடிதம் பார்வையில் குறிப்பிடபட்டுள்ளதா என்றால்**,** நான் பதிவு செய்த முதல்தகவல் அறிக்கை கு**.**எண் **12/2011** ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கோயமுத்தூர்**.** சட்டபிரிவுகள் **13(2)** உடனினைந்த **13(1)(e)** ஊழல் தடுப்பு சட்டம் **1988** எனவும் எதிரிக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை எனவும் பார்வையில் குறிப்பிட்டுள்ளது**.**

**(**இந்நிலையில் நீதிமன்ற அலுவல் நேரம் **05.30** மணி நிறைவடைந்துவிட்ட நிலையில்**,** இருதரப்பு வேண்டலின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக **30.09.2021** ஆம் தேதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது**).**